**செய்தி வெளியீடு எண்: 781** **நாள்: 23.12.2011**

# <u>செய்திக்குறிப்பு</u>

திருமுல்லைவாயில் மகளிர் தொழிற்பேட்டை மாண்புமிகு தமிழக முதல்வரால் 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்தொழிற்பேட்டை முழுவதுமாக பெண் தொழில் முனைவோருக்காக உருவாக்கப்பட்டது. இன்றைய தினம் (23.12.2011) மாண்புமிகு ஊரகத் தொழில்துறை மற்றும் சத்துணவு அமைச்சர் எம்.சி.சம்பத் திருமுல்லைவாயில் மகளிர் தொழிற்பேட்டையில் பெண் தொழில் முனைவோர்களின் குறைகளை கேட்டறிந்தார். அவர்கள், ஆவடி–செங்குன்றம் சாலை வசதியை சீர்படுத்தவும், பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்குமாறும் தொழில்பேட்டையில் வங்கிக் கிளை செயல்பட ஆவன செய்யுமாறும் மாண்புமிகு அமைச்சரிடம் கோரிக்கை வைத்தனர். தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகளையும் மாண்புமிகு அமைச்சர் பார்வையிட்டார்.

மாண்புமிகு அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அவற்றை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறையின் முதன்மை செயலர், டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப மற்றும் தமிழக சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப அவர்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் வருகை தந்தார்கள்.

*********************************************************************************************

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**